# இலங்கை கலை மன்றம் - 2012

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை கலை மன்றத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது தயாரிக்கப்பட வேண்டிய காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் சொத்துரிமை மாற்றக் கூற்று என்பன தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டு முடிவில் எஞ்சியிருந்த ரூபா 673,651 கிரயமுடைய புத்தகங்களதும் சஞ்சிகைகளதும் பெறுமதி கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

#### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்குரிய சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் அவ்விடயங்களைத் திருப்திகரமாகச் சரி, பிழை பார்க்க முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| வங்கி மீதி | 613,353 | மீதியை உறுதிப்படுத்தல் |
| நிலையான வைப்பு | 500,000 | மீதியை உறுதிப்படுத்தலும் நிலையான வைப்புச் சான்றிதழும் |
| அலுவலக உபகரணம் | 440,341 | பட்டோலைப் பொருள் பதிவேடு பொருட் கணிப்பு அறிக்கை |
| தளபாடங்களும் சிறு கருவிகளும் | 7,725 | - மேற்படி - |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

**கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க கலை மன்ற அதிகாரச் சட்டம் | |
| (i) உப பிரிவு 10(1) | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மன்றம் கூட்டத்தை நடாத்த வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டில் 2 கூட்டத் தொடர்களையே மன்றம் நடாத்தியிருந்தது |
| (ii) உப பிரிவுகள் 18(1) மற்றும் (2) | நிதியாண்டு முடிவில் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **(ஆ) அரசாங்க நிதி பிரமாணங்கள்** | |
| (i) நி.பி 168 | மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 1,427,850 க்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவில்லை. |
| (ii) நி.பி 231(2) | கொடுப்பனவுகளை இலகுவாக இனங்காண்பதற்கு கொடுப்பனவுக்குரிய சகல முக்கிய ஆவணங்கள் மற்றும் உப |

| | | |
|---|---|---|
| | | உறுதிச் சான்றுகள், பற்றுச்சீட்டுக்கள் என்பன கொடுப்பனவு உறுதிச் சான்றுகளில் குறிப்பிடப்படவில்லை. |
| (iii) | நி.பி 237 (அ) | நடப்பாண்டில் அச்சிடப்பட்ட புத்தகங்கள் குறித்த வடிவமைப்புக்கிசைய வழங்கப்பட்டதற்கான சிபார்சு அல்லது சான்றிதழ் இல்லாமல் அவற்றை அச்சிட்டமைக்காக ரூபா 538,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iv) | நி.பி 264 (1) | கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்குரிய தொகையை சேவைநாடுநர் பெற்றுக்கொண்டதைப் பற்றுச்சீட்டு மூலம் உறுதி செய்யவில்லை |
| (v) | நி.பி 371(இ) | நான்கு உத்தியோகத்தர்கள் 17 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 309,000 முற்பணத்தில் எஞ்சிய ரூபா 138,939 தீர்த்து வைக்கப்படுவதற்கு 7 முதல் 65 நாட்களாகின. |
| (vi) | நி.பி 371(2) (ஆ) | மன்றத்தின் 5 உப குழுக்களில் நிறைவேற்று தரத்தைச் சேராத உப குழுச் செயலாளர்களுக்கு துணைக்குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குச் செலவிடுவதற்கென 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,042,750 வழங்கப்பட்டிருந்தது. |
| (vii) | நி.பி 751 (1) | அச்சிடப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றிக்கான பதிவேடுகள் முறைப்படி பேணப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2010 ஜனவரி 19 ஆந் திகதிய PED/549 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | அரச நிறுவனங்களில் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள நிதிசார் நிலைமை மற்றும் நிதிசார் விளைவுகள் என்பவற்றைக் காட்டும் கூற்றுக்கான மாதிரிப்படிவத்திற்கமைய அக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின்போது துணைக்குழுக்களது கூட்டங்களில் துணைக்குழச் செயலாளர்களுக்கும் உதவிச் செயலாளர்களுக்கும் ரூபா 62,100 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், அதன் பொருட்டு தாபனப் பணிப்பாளரதும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் பெறப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சுமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 465,600 பற்றாக்குறையானது இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 202,772,ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 262,828 குறைவடைந்தமைக்குப் பிரதான காரணிகளாக அமைந்தவை செயற்பாட்டுச் செலவினத்தின் ரூபா 203,145 அதிகரிப்பும் வருமானக் குறைவாகிய ரூபா 59,685 என்பனவே ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

1982 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க கலை மன்ற அதிகாரச் சட்டத்தின் 12(1) பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்ட 5 துணை மன்றங்ளில் நான்கினது கூட்டங்களில் துணை மன்ற அங்கத்தவர்கள் கலந்து கொள்வது குறைந்த மட்டத்தில் அமைந்திருந்தது. அரசாங்க சங்கீத துணை மன்றக் கூட்டங்களில் ஒவ்வொரு தடவையும் அங்கத்தவர்கள் அரைவாசிக்குக் குறைவாகவே கலந்து கொண்டிருந்தனர்

**3.2 பதவியணியினர் நிர்வாகம்**

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க கலைமன்ற அதிகாரச் சட்டத்தின் 13(1) (2) பிரிவுகளின் மூலம் அதன் பதவியணிக்கான நியமனங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய DMS/E3/53/4/311/1 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலிலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தது.

(ஆ) கணனித் தரவுப் பதிவு செயற்பாட்டாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய 2 பதவிகளுக்கும் 2005 ஆகஸ்ட் 01 தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு கால நீடிப்பின்றி தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2013 மே 31 ஆந் திகதியளவிலும் அவர்களது பதவிகள் நிரந்தரமாக்கப்படவில்லை.

**4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுமையும்**

**4.1 ஒன்றிணைந்த செயல் திட்டம்**

2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய மன்றத்தின் தொலை நோக்கையும் இலக்கையும் எய்தக் கூடிய 03 வருடத்திற்குரிய ஒன்றிணைந்த செயல் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

**4.2 செயல் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தில் மீளாய்வாண்டின் போது செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், செயற்பாடுகள் என்பன சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

## 4.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டிற்கென வரவு, செலவுத் திட்டம் ஒன்றைக் கலை மன்றம் தயாரிக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் நிலவிய பலவீனங்கள் அவ்வப்போது சபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பதவியணிக்கு ஆட்சேர்ப்பு

(ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு